# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 16/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : வேணுகோபாலன் | ஜாதி | : -- |
| வயது | : 51 | கிராமம் | : பெரியகடம்பூர் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**06.11.2024**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 10க்கு 40 நான் பத்திரப்பதிவு செய்த இடமாகும். அதில் தகராறு செய்கிறார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய பூர்வீகம் வழக்கு சொத்து உள்ள பெரியகடம்பூர் கிராமம் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் அதே ஊர் என்றால் சரிதான். நான் அதே ஊர் என்பதால் பிரதிவாதிகளின் பூர்வீகம் முன்னோர்கள் விவரம் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கும் ரங்கசாமி மனைவி ராஜம்மாளுக்கும் வீட்டு மனை பிரச்சனை உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2. தாவா சொத்து கிராம நத்தம் என்றால் சரிதான். அதைதான் நாங்கள் பத்திரப் பதிவு செய்துள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ரங்கசாமிதான் முதலில் வழக்கு சொத்தை அனுபவித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரங்கசாமிதான் அனுபவித்து வந்தார் என்பதை காட்ட வீட்டு வரி ரசீது குடும்ப அட்டையோ, மின் கட்டண ரசீதோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரங்கசாமி இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் 30 வருடம் இருக்கும். கிராம நத்தத்தை பொறுத்த வரை யார் அனுபவத்தில் உள்ளாரோ அவருக்கு தான் பட்டா வரும் என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 1 பட்டா 26.02.2019 ல் தான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். ரங்கசாமி இறந்து 30 வருடம் ஆன பின்பு 2019 ல் அவர் பெயருக்கு பட்டா எப்படி வந்தது என்றால் அடங்கல் எடுத்து பார்த்தால் வரும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)